நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 5 சனிக்கிழமை ( 17-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 60

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

## புலிகள் பலவீனமானவர்கள் அல்ல

# பிரித்தானியஅரசுபுலிகளை தடை செய்யமாட்டாது?

### அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை

(லண்டன்)

பிரித்தானிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் எந்தவொரு முயற்சியிலோ,நடவடிக்கையிலோ ஈடுபடமாட்டாதென நான் நம்புகிறேன்;—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனமாக இருப்பதால்தான் யுத்த நிறுத்த அறிவிப்பை அறிவித்திருக்கின்றனர் என அரசு கருதுமானால் அது தவறானது இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய செய்திஸ்தாபனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய அரசு விடுதலைப்புலிகளை தடை செய்தாலும் அரசு புலிகளுடன் பேசத் தயங்காது என்று ஜனாதிபதி சந்திரிகாவும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரும் தெரிவித்திருந்த கருத்துக்களை அடுத்து விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு பேட்டி வழங்கியுள்ளார்.

அப்பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழவிடுதலைப் புலிகள் ஆயுத ரீதியிலும், தார்மீக ரீதியிலும் வலிமை உடையவர்களாகவே இருக்கின்றனர் இந்நிலையில் புலிகளை பலவீனமாக இருக்கிறார்கள் என்று அரசு கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும் )

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த செக். குடியரசின் தூதுக்குழு நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியுள்ளது.

(ந- 4)

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் மீளக்குடியேறி வளவை துப்பரவு செய்துதீமூட்டிய சமயம் மர்மப்பொருள ஒன்றுவெடித்ததினால் இளைஞன் ஒருவன்

(8-ம் பக்கப் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் யாழ்ப்பாணம் வருகை!

[யாழ்பபாணம்]

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ஸ்ரான்லிவீதியிலுள்ள ஈ.பி.டி.பியின் தலைமைக் காரியாலயத்தில் தங்கியிருக்கும் அவர் பொது மக்கள். பொது அமைப்புகளைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறியவுளளர்.

(ம)

## கைதடிப் பகுதியில் 1,161 குடும்பங்கள்

கைதடி பிரதேசத்திலுள்ள ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இதுவரை ஆயிரத்து161 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இக்குடும்பங்கள் தற்போது தமது'வீடுகளையும் சுற்றாடல்களையும் துப்பரவுசெய்கின்றபணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது

கைதடிப்பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான அத்தியாவசிய பொருட்களை தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்

→ 2ஆம் பக்கம் பார்க்க)

## கைகள் கட்டப்பட்ட நிலையில் பற்றைக்குள் இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் இருபாலை வீதிக்கருகாமையில் உள்ள பற்றைக்காணிக்குள் இனந் தெரியாத இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மாலை 5.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 25வயதுமதிப்பிடத்தக்க இவ்விளைஞன் செக்நிறச் சேட்டும், நீண்ட காற்சட்டையும் அணிந்திருப்பதாகவும், தலையில் வெட்டுக் காயங்களுடனும் நெஞ்சில் கத்திக் குத்துக் காயங்களும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது ஆடுமேய்க்கும்சிறுவன்ஒருவன் ஆடுகளைமேய்த்துக்கொண்டு பற்றைப்பகுதியால் சென்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மின்சார சபையில் ஊழல் ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் மின்சார சபையில் ஊழல் மலிந்து விட்டது. அச்சபையின் உயர் அதிகாரிகள் மாளிகைகள் கட்டியுள்ளனர். இவ்வாறுஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சாட்டி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாமன்னார்பகுதியில் இன்றுசமாதானப் பேரணி

(வவுனியா)

வவுனியா, மன்னார் பிரதேசங்களில் இன்று மாபெரும் சமாதானப பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

இன்று நாட்டுக்குத் தேவையான சமாதானத்தை வலியுறுத்தியே இச் சமாதானப் பேரணி நடைபெறவுள்ளது.

வவுனியாவில் இடம் பெறவுள்ள சமாதானப் பேரணியை இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ சமயத்தவர்கள் ஒன்றிணைந்து நடத்தவுள்ளனர்.

இச் சமாதானப் பேரணி வவுனியா ரம்பைக்குளம் தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகி வவுனியா செய

→8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை பயங்கரவாதிகளென்றால் அரசு யாருடன் பேசப்போகிறது?

### மன்னார் ஆயர் கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசாங்கம் தடை செய்யக்கூடாதென மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இந்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடை செய்தால் யுத்தமும் அழிவுகளுமே ஏற்படும் நிலமை உருவாகுமென்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்;

அதேவேளை விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என பகிரங்கப்படுத்திவிட்டு பேச்சுவார்த்தைநடத்துவதில் எந்தப் பயனும் ஏற்படப்

→8ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கருகாமையில் இனந்தெரியாத இளைஞர் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் நந்தாவில் அம்மன் கோவிலுக்குச் செல்லும் வீதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இச் சம்பவம் இடம் பெற்ற வேளை பாலர் பாடசாலையில் படிக்கும் தனது மகனைக் கூட்டிவரச் சென்ற இளம் பெண் ஒருவர் அவ் வீதியால் சென்றபோது இராணுவத்தினரின் விசாரணைக்குட்

→8ஆம் பக்கம் பார்க்க

### 5-ம் தர புலமைப் பரீட்சையில்

## முதலிடம் பெற்ற மாணவனுக்கு துரோகம் இழைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

2000ஆம் ஆண்டில் நடைபெற்ற 5ஆம்தர மாணவர்களுக்கான புலமைப் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கையில் எட்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்ட வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய மாணவன் செல்வன் புஸ்பராசா சிவரூபனின் யப்பான் பயணத்தில் துரோகம் இழைக்கப்பட்டதால் அந்த மாணவன் யப்பான் செல்லும் பெரும் வாய்ப்பை இழந்துள்ளான்.

(2ஆம் பாக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம் பிரம்ம ஸ்ரீமாத நவீரமணிஐயர் இயற்றிய திருமலை வில்லூன்றிக் கந்தன் குறவஞ்சி நாடகம் என்ற நூலை மாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. [உ-9]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப். மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 158671 ஏ | 158671 பி |
| 158671 சி | 158671 டி |
| 175736 ஏ | 175736 பி |
| 181459 ஏ | 181459 பி |
| 181459 சி | 181668 ஏ |
| 182663 ஏ | 182797 ஏ |
| 183040 ஏ | 183040 பி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 177863 ஏ | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 14521 ஏ | 14521 பி |
| 14521 சி | 14521 டி |
| 14521 ஈ | 14522 ஏ |
| 14522 பி | 14522 சி |
| 14522 டி | 14523 ஏ |
| 14526 ஏ | 14554 ஏ |
| 14574 ஏ | 14591 ஏ |
| 14591 பி | 14685 ஏ |
| 14685 பி | 14591 சி |
| 14591 டி | 14631 ஏ |
| 14631 பி | 14633 ஏ |
| 14640 ஏ | 14640 பி |
| 14647 ஏ | 14647 பி |
| 14665 ஏ | 14667 ஏ |
| 14668 ஏ | 14668 பி |
| 14681 ஏ | 14682 ஏ |
| 14684 ஏ | 14684 பி |
| 14684 சி | 14684 டி |
| 14684 ஈ | 14684 எவ் |

### நல்லூர்

| | |
|---|---|
| 179387 ஏ | 179387 பி |
| 181626 ஏ | 182678 ஏ |
| 182745 ஏ | 182793 ஏ |
| 182793 பி | 182793 சி |
| 182838 ஏ | 182838 பி |
| 182847 ஏ | 182855 ஏ |
| 182855 பி | 182856 ஏ |
| 183272 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 182362 ஏ | 182362 பி |
| 182362 சி | 183589 ஏ |
| 183589 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 160816 ஏ | 160816 பி |
| 160817 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 176586 ஏ | 176586 பி |
| 176586 சி | 179452 ஏ |
| 181559 ஏ | 181607 ஏ |
| 181666 ஏ | 181666 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 146974 ஏ | 172757 ஏ |
| 173124 ஏ | 179033 ஏ |
| 179033 பி | 179075 ஏ |
| 179075 பி | 179075 சி |
| 179262 ஏ | 179444 ஏ |
| 181401 ஏ | 181401 பி |
| 181401 சி | 181413 ஏ |
| 181413 பி | 1814 3 சி |
| 181413 டி | 181567 ஏ |
| 181612 ஏ | 181612 பி |
| 181612 சி | 181612 டி |
| 182686 ஏ | 182686 பி |
| 182686 சி | 182720 ஏ |
| 182755 ஏ | 182765 ஏ |
| 182852 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 14597 ஏ | 14597 பி |
| 14605 ஏ | 14605 பி |
| 14605 சி | 14642 ஏ |
| 14655 ஏ | 14655 பி |

# வயல்நிலங்களை கட்டாக்காலிகள் முற்றுகை

(மந்திகை)

வடமராட்சி பகுதியில் வயல்களை கட்டாக்காலி மாடுகள் அழித்துவருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்

ஆனைவிழுந்தான், மரக்கிரான், காட்டுவயல், முள்ளி பகுதியில் உள்ள வயல் வெளிகளிலேயே கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

மக்கள் இடம்பெயர்ந்த தன் காரணமாக பராமரிப்பின்றி திரியும் மாடுகள் பயிர்களை நாசம் செய்வதில் முன்னணி வகித்து வருவதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சில பகுதிகளில் பன்றிகளும் வயல் நிலங்களில் புகுந்து தொல்லை விளைவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-59)

## வடமராட்சி கிழக்கில் 5 பாடசாலைகளில் ஆசிரியர் இல்லை

[செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கிவரும் 5பாடசாலைகளில் உடற்கல்வி போதிப்பதற்கான ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை.

கடந்த வருட இடப்பெயர்விற்கு முன் இப்பாடசாலைகளின் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கடமைபுரிந்தபோதிலும், தற்போது அவர்களுக்கு வடமராட்சி பகுதிப் பாடசாலைகளில் நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளதையடுத்தே இவ் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேசமயம்,

தரம் 6 தொடக்கம் 11 வரைஉடற்கல்வி பாடசாலைகளில் கட்டாய பாடமாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-42)


## மாணவ மாணவிகளே!

ரூ. 1000/- வீதம் 5 பேருக்கு அதிர்ஷ்டப் பரிசில்கள் வழங்கப்படும்.

நீங்கள் லாலா சோப், சன்சைன் சோப்பின் மேலுறைகள் 10 சேகரித்து உங்கள் பெயர், பாடசாலை முகவரி, கற்கும் ஆண்டு என்பவற்றுடன் அனுப்பி வைத்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலியாகலாம்

ஒருவர் எத்தனை மேலுறைகளையும் அனுப்பலாம்.
சன்சைன் சோப்பின் மேலுறகளை இனங்கண்டு அனுப்பிவையுங்கள்.

## லாலாசோப், அச்சுவேலி

(கி/1501)



## இந்து மாமன்றம்

வட மாநிலம்

# இசை அரங்கு

ராகம் ஒன்று ரசனை மூன்று

இடம்:-

**குமாரசாமி மண்டபம்**
**யாழ். இந்துக்கல்லூரி**

நேரம்:- 18.02.2001 ஞாயிறு மாலை 4 மணி
தலைவர்:- உயர்திரு அ. சிறிக்குமரன்
(அதிபர் யா/ இந்துக்கல்லூரி.)

★ வயிறுநிறையச் சாப்பிட்டேன் ஆனால் உணவு எரிந்துவிட்டது.
★ வீட்டுக்குப் போனேன் வீட்டில் பிள்ளைகள் இல்லை எல்லாம் வெளிநாட்டில்.
★ அயலவர் ஒருவரும் இல்லை கொழும்பில் அவர்கள் போய்க் கொண்டாட்டம்.
★ நான் என்ன செய்வேன்.

ஒருசில மணிநேரம் அமைதியாக
பொழுதைப் போக்குவோம்
வாருங்கள் இசை அரங்குக்கு

**பிரவேசம்: ரூபா30/-மட்டும்**

(இந்நிதி வறிய மாணவரின் அடிப்படைத் தேவைகளுக்காக செலவிடப்படும்)

(கி/1499)


# சுழிபுரத்தில் போஷாக்கு உணவுக் கண்காட்சி

(சங்கானை)

சுழிபுரம் கிழக்குவீரபத்திரர் பாலர் பாடசாலையில்கடந்த புதன்கிழமைபோஷாக்குஉணவுக்கண்காட்சி நடை பெற்றது.

சீ ரீ. ஆர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கண்காட்சியை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க. கணேஸ்வரராஜா ஆரம்பித்துவைத்தார். இந் நிகழ்வில் உள்ளூர் பொருட்களை கொண்டுசத்து மிக்கதும் மலிவானதுமான போஷாக்கு உணவுகளைத் தயாரிக்கும் முறைபோஷாக்கு உணவு மாதிரிகளும் பார்வைக்குவைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் சிறந்தஉணவு உற்பத்தி மாதிரிகளுக்கு பெறுமதி மிக்கப்பரிசுகளும் வழங்கப்பட்டன

இதே வேளை, எதிர் வரும் நாட்களில் இக் கண் காட்சி நிகழ்வு வலி-மேற்கு மற்றும் வலிகாமம் பகுதி கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-124)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின்ஜெயந்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப 9. 00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (உ)

## முதலிடம்

1ம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப் பரீட்சையில் முதன்மையான புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் யாப்பானுக்குச் சுற்றுலாச் செல்லும வாய்ப்பை அரசாங்கம் வழங்கி வருகின்ற போதிலும் மாணவன் புஸ்பராசா சிவரூபனுக்கு அவ்வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மாறாக மாணவன் சிவரூபனுக்குக் கிடைக்க வேண்டிய யப்பான் சுற்றுலா, யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ் டொண் பொஸ்கோ மாணவி ஒருவருகே கிடைத்துள்ளது

மாணவன் சிவரூபனுக்கு யப்பானுக்கான சுற்றுலா அனுமதி கிடைப்பதற்குத் தடையாக இருந்து துரோகம் இழைத்த பிரகிருதி அந்த மாணவன் கல்விகற்ற சிவகுரு வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இப்பிரகிருதியின் துரோகத்தனத்திற்கு கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது ஒருபுறமிருக்க சிவகுரு வித்தியாலயத்தில் நிலவும் சமூக அமைப்புப் பிரச்சினையே அந்த மாணவன் மீது பழிவாங்குவதற்குக் காரணமாக இருந்ததாக அப்பகுதிப் பிரமுகர் ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில் மேற்படி மாணவனுக்கு பாராட்டு விழா நடத்துவதற்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை ஒழுங்குகளை மேற்கொண்டு அழைப்பிதழ்களை அனுப்பிய போதும் சிவகுரு வித்தியாலயத்தில் அதனை நடத்துவதற்கு இறுதி நேரத்தில் பாடசாலை நிர்வாகம் தடுத்ததாகவும், இதனால் அப்பாராட்டு விழா வல்லை மகளிர் வித்தியாலயத்தில் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தந்தையை இழந்த ஏழை மாணவனான புஸ்பராசா சிவரூபனுக்குஇழைக்கப்பட்ட துரோகம் குறித்து பூரணமான விசாரணையை நடத்த வேண்டுமெனவும் இதுவிடயத்தில் வடபகுதி புனர்வாழ்வு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மற்றும் யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உதவ வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள்வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

ந-12-23)


தெல்லிப்பழை

## துர்க்காபுரம் மகளிர் இல்லம்

# 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

18 02.2001 ஞாயிற்றுக்கிழமை

அன்புடையீர்,

வணக்கம்

மேற்படி விழா துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவுவிழாவாகும். இவ் விழாவுக்கு அன்பர்கள், நலன் விரும்பிகள் ஆன்மீகவாதிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:-** ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபம்

**காலம்:-** 18.02.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

**தலைமை:-** சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள்
(தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை)

**பிரதம விருந்தினர்:** பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள்

**பரிசில் வழங்கல்:** திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள்
(தலைவர், வலி - வடக்கு பிரதேச சபை)

[கி/1493]



## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் 9ஆம்வட்டாரம் புங்குடுதீவு, மேற்படி விலாசத்தில் வசிக்கும் எனதுதேசிய அ. அ. இல. 581521349 V) திருநெல்வேலிக்கும், பாற்பண்ணைக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் ''வலம்புரி'' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2538)


## கைதடிப்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது

அத்துடன்அங்குள்ள பொது மற்றும் கோவில்கிணறு துப்பரவு செய்யும்பணியும் இடம்பெற்று வருவதாகத் தெரிகின்றது. (ந-77)

# மாதாவின் பாதங்களில் பேதங்களை மறப்போம்

### பாதுகாவலன் ஆசிரியர் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டின் சமாதானத்துக்காகப் பல பாகங்களிலும் குரல் எழுப்பப்படுகின்ற வேளையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தை நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி தென்னிலங்கைக்கு பவனியாக எடுத்துச்செல்லும் பணியினை இன்று ஆரம்பிக்கின்றது.

இலங்கைக் கத்தோலிக்க மக்களின் வழிகாட்டிகளாக சமாதானம் என்கின்ற இந்த மண்ணின் நீண்டகாலக்கனவை நனவாக்க மடு அன்னையிடம் வேண்டும் இப்பாரிய பணியில் காலடிவைத்துள்ள இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கத்தினர் இப்பயணத்தின்போது மடு அன்னையின் காலடியில் கடந்த காலங்களில் சிங்களவர்களும் தமிழர்களும் அனுபவித்த அதே அன்புணர்வையும் ஒற்றுமையையும் மீளவும் அனுபவிக்க வேண்டுமென விருப்புகின்றனர்.

நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி முதல் தடவையாக மடுமாதா சொரூபத்தினை தென்னிலங்கை முழுவதிலும் சமாதானப் பவனியாக எடுத்து வரும் தேசிய முயற்சி குறித்து பாதுகாவலன் ஆசிரியர் வணக்கத்துக்குரிய ரூபன் மரியாம்பிள்ளை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும், மடுப்பகுதி இலங்கை வாழ் தமிழ் சிங்கள கத்தோலிக்க மக்களை இணைக்கும் ஒரு புனித பூமியாகவிளங்குகின்றது.

மடுப்பதியின் திருநாள் தினங்களில் கடந்த காலங்களில் இன பேதமின்றி மக்கள் எல்லோரும் ஒன்றுகூடியிருந்தமை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

இந்த சமாதானப் பவனி கொழும்பு மறை மாவட்டம், உட்பட அனுராதபுரம், காலி, கண்டி, குருணாகலை ஆகிய மறை மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5-55 மணிக்கு நாட்டிலுள்ள கத்தோலிக்க ஆலய மணிகள் அனைத்தும் ஒலிக்கவும் நற்கருணை ஆண்டவருக்கு முன்பாக திருமணித்தியாலய வழிபாடுகளில் ஈடுபடவும் அழைப்பு விடுக்கப்படுகிறது.

[உ]

### போக்குவரத்தில்

# இடையூறு செய்வோர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(மந்துவில்)

நெல்லியடி பகுதியில், சமாந்தரமாகத் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர், ஏனையோரின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் விதத்தில் வாகனங்களுடன் நின்று கதைப்பவர்கள் ஆகியோர் மீது பொலிஸார் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் மீதான குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்றது.

அத்துடன் மோட்டார் சைக்கிள்களின் வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன பற்றிய விபரங்களும் பொலிஸாரினால் பதியப்படுகின்றன.

(செ-39)

# பாலர் பாடசாலை திங்கள் முதல் இயங்கும்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை மாதர் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் ஈச்சமோட்டை பாலர் பாடசாலை திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது.

கடந்தகால போர் அனர்த்தங்களால் இப் பகுதிகளை அண்டியுள்ள மக்களின் இடம்பெயர்வினால் கடந்த பத்து மாதங்களாக இப்பாடசாலை இயங்கமுடியாத நிலையில் காணப்பட்டது.

அத்துடன் பாடசாலையின் பெறுமதிமிக்க சிலதளபாட உபகரணங்களும் திருட்டுப் போயுள்ளன.

இப் பகுதியில் மக்கள் கணிசமான அளவு குடியேறியதையடுத்து பெற்றோர்கள் பலரின் வேண்டுகோளுக்கமைய மாதர் சங்கத்தினர் இப் பாலர் பாடசாலையினை மீண்டும் ஆரம்பிக்க மாதர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(உ-59)

# கிறிஸ்தவ சமயம் போதிக்க போதிய ஆசிரியர் இல்லை

(செம்பியன்பற்று)

மணற்காடு றோ. க. த. க பாடசாலையில் கிறிஸ்தவ சமயம் போதிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்றது.

தரம் 1முதல்தரம் 2 வரை வகுப்புகள் உள்ள மேற்படி பாடசாலையில் தரம் 6 வரைக்குமே கிறிஸ்தவ சமயம் போதிக்கப்படுகிறது.

ஏனைய வகுப்புக்களுக்கு கிறிஸ்தவ சமயபாட போதனை இடம்பெறுவதில்லை.

இதனால் க. பொ. த சாதாரண தரத்தில் மேற்படி பாடநெறிக்கு தோற்றும் மாணவர்கள் பெருத்த பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, மேற்படி பாடசாலையில் கிறிஸ்தவ பிள்ளைகள் மாத்திரமே கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-42)

### இலங்கையில்

# கைது செய்யப்பட்டோர் தொகை பதினெட்டு ஆயிரத்திற்கும் அதிகம்

[கொழும்பு]

இலங்கை பூராகவும் கடந்த வருடம், அவசர காலச்சட்டம் மற்றும் பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையினராலும் பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்டவரின் எண்ணிக்கை 18 ஆயிரத்திற்கும் அதிகமாகும்.

இவ்வாறு மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான இணைப்பதிகாரி என். சந்தசாமி தெரிவித்துள்ளார்.

இக்கைதிகள் தொடர்பாக கொழும்பு ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின் படி 13 ஆயிரத்து ஐநூற்றிப் பதின் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள போதும் உண்மையான எண்ணிக்கை 18 ஆயிரத்திற்கும் அதிகமாகும்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மிக அதிகமானவர்கள் தமிழர்கள் ஆவர்.

எனினும் இதில் 40 வீதமான கைதுகள் தொடர்பாக செய்தி ஊடகங்களில் தகவல் ஏதும்வெளியிடப்படவில்லை.

2 ஆயிரத்து ஐநூறிற்கும் மேற்பட்ட தமிழர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அரசியல் கைதிகள் எனவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## கண்காட்சி

(கொழும்பு)

விண்வெளி விஞ்ஞானம் தொடர்பான 'அஸ்ட்ரோ' 2001 கண்காட்சி இலங்கைக் கோள் மண்டல நிலையத்தில் நடைபெறுகிறது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இக் கண்காட்சி தொடர்ந்து ஞாயிறு வரை தினமும்காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடை பெறும்.

[உ-9]

## இராசி பலன்

17-2-2001

(மாசி 5, சனிக்கிழமை)

தசமி பி.இ 4.34 வரை

சேட்டை மாலை 6.01 வரை

இராகுகாலம் 9.33- 11.03

சுபநேரம் 3.33- 5.03

சித்தம்.

**மேடம்**

குறைகேட்டல், காரிய அலைச்சல், அமைதிக்குறைவு, எதிர்பாராத அரச நன்மை.

**இடபம்**

நண்பர்கள் சந்திப்பு, தொழில் நன்மை, சுவாரசியம், தனவரவு.

**மிதுனம்**

இலட்சுமிகரம், நிலை மாறல், காரிய நிறைவு, புதிய முயற்சி.

**கடகம்**

சொத்துக்களால் மனஸ்தாபம், உடல் சோர்வு, வியாதி, முயற்சி தாமதம்.

**சிங்கம்**

உறவினர் மனஸ்தாபம், விரோதம், காரிய தாமதம், மனப்பயம்.

**கன்னி**

தனவரவு, வசீகரம், பிறர் உதவி, முயற்சி கைகூடும்.

**துலாம்**

வாக்குப் பலிக்காமை, பொருள் விரயம். காரிய நன்மை, அமைதிக் குறைவு.

**விருச்சிகம்**

கற்பனை மிகுதி, முயற்சி ஜெயம், தடுமாற்றம், பொருள் விரயம்.

**தனுசு**

பிரயாணம், அமைதிக் குறைவு, முயற்சி மந்தம், திடீர் நன்மை.

**மகரம்**

கீர்த்தி, காரிய நிறைவு, சந்தோசமான சம்பவம், பொருள் வரவு.

**கும்பம்**

அதிகாரம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை, சிறுவியாதி.

**மீனம்**

கட்டுப்பாடு, இடமாற்றம், காரிய மந்தம், அலைச்சல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# சித்திரவதைதொடர்பான விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டோர்விபரம்

(யாழ்ப்பாணம்)

சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக கொழும்பில் இருந்து வந்துள்ள குற்றப் புலனாய்வுக் குழுவினர் யாழ். பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கும் 155 பேரில் ஒரு தொகுதியினரின் பெயர்கள் நேற்றைய வலம்புரியில் வெளியாகி இருந்தன. ஏனையோரின் விபரம் வருமாறு.

தங்கவேல் சந்திரகுமார் (23 உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை) பூதத்தம்பி சதீஸ்குமார் (குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு புத்தூர்) செல்வரட்ணம் தேவாநந்தன் (41/15 சங்கிலியன் வீதி, நல்லூர்) மகாலிங்கம் நவசெல்வன் (70/12, மத்திய வீதி யாழ்) அப்புத்துரை ஜெயரட்ணம் (கொண்டலடி ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு) துரைசிங்கம் குணசேகரன் (138/1 கொட்டடி வீதி குருநகர்) தர்மரட்ணம் சர்மவசீகரன் [அளவெட்டி மேற்கு] குஞ்சுமணி உதயராஜா [ஈவினை பன்னாலை, கட்டுவன்] சின்னத்துரை அம்பிகைபாலன்[இயற்றாலை வரணி] இளையதம்பி திருஞானச்சந்திரன் [பிரப்படி வீதி மந்துவில் கிழக்கு கொடிகாமம்] ஜோகேஸ்வரன் சேரன் (9/1 அரசடி வீதி அரியாலை) நடராஜா ஜீவரதன் [பளை] குலசிங்கம் அம்பிகைபாலன் (நாவற்குழி கைதடி) பொன்னையா ஜெயராஜா [நாவற்குழி தெற்கு, கைதடி] நவரதன் ஆனந்தராஜா (நாவற்காடு, அச்சுவேலி) சண்முகதாஸ் முருகதாஸ் [215/19 இராசாவின் தோட்டம் வீதி யாழ்] கந்தர் விமலேந்திரன் [இயற்றாலை வரணி]சிவகுருநாதன் ஆனந்தகிருஷ்ணன் (அம்மன் வீதி பத்திரகாளி கோயிலடி திருநெல்வேலி கிழக்கு) சிவசுப்பிரமணியம் அரியதாஸ் (சுழிபுரம் கிழக்கு வலிகாமம்) குகநாதன் விஜயகுமார் (460 ஜும்மா பள்ளிவாசல் வீதி யாழ்ப்பாணம்) கனகசூரியர் சசிகுமார் [கைதடி நுணாவில்] சுப்பிரமணியம் மகேந்திரன் [132, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்] வல்லிபுரம் அற்புதநேசன் (127 வத்திராயன் வடக்கு தாளையடி) கந்தசாமி ஞானாகரன் [விடத்தற்பளை மிருசுவில்] காசிப்பிள்ளை குகேந்திரராஜா [வீரபத்திரர் கோயிலடி சமரபாகு வல்வெட்டித்துறை] ஆசீர்வாதம் பரணி [ராஜேஸ்வரி அம்மன் வீதி, உடுவில் சுன்னாகம்] பத்மநாதன் சுதர்சன் [நுணாவில் மேற்கு, சாவகச்சேரி] பிள்ளையன் பாஸ்கரன் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி] வேலன் இரத்தினசிங்கம் [ஐயனார் கோயில் வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு] செல்வராஜா கோபிராஜா [52/2 முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்] அமிர்தலிங்கம் யுகேந்திரன் [அம்மன் கோயிலடி அராலி கிழக்கு வட்டுக்கோட்டை] இரத்தினசிங்கம் ராஜாகுமார் (கைதடி கிழக்கு கைதடி) நவரட்ணம் குமார் [டச்சு வீதி, கோப்பாய் தெற்கு] சசிந்தன் இராசையா (நாவாலி வடக்கு, மானிப்பாய்] இளங்கநாதன் ஜெகதீஸ்வரன் [44, கொண்டலடி நல்லூர்] அன்ரனி நேசராஜா [குளமங்கால், மல்லாகம்] கணேசலிங்கம் கிருபாகரன் [நாவற்குழி தெற்கு, கைதடி] பழனி சர்வேஸ்வரன் [நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை] துரை தங்கத்துரை [ஏ வி வீதி அரியாலை) எஸ் திருவருட் செல்வன் [கோயிலாக்கண்டி, கைதடி] அன்ரனி அன்ஸ்ரர் (15 பீச் றோட், பாசையூர்) ஜெயராஜா ஜெகன் (1, ஏ வீ. றோட். மூன்றாம் ஒழுங்கை கொழும்புத்துறை] கந்தவனம் குகதாஸ் [கோப்பாய் மத்தி கோப்பாய்] கந்தையா சிறீதரன் [ஒட்டுவெளி, மிருசுவில்] நன்னி நவரட்ணம் [கைதடி மத்தி, கைதடி] டி ஜெயலலிதா [மறவன் புலோ, சாவகச்சேரி] இராஜதுரை சுரேஸ்குமார் டிஸ்பென்சரி ஒழுங்கை, கல்வியங்காடு] எஸ். கோபலகிருஷ்ணன் [கைதடி தெற்கு. கைதடி) கலசப்பு அல்போன்ஸ் ஷல்டன் (11, மத்திய வீதி. குருநகர்] சிவமுத்து முனீஸ்வரநாதன்[6ஆம்கட்டை, அறுகுவெளி, தனங்களப்பு] சீனியர்தர்மலிங்கம்[கந்தரோடை சுன்னாகம்) செல்வரட்ணம் அருணன் [கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்] சின்னராசா ரங்கன் [நுணாவில் மத்தி, சாவகச்சேரி] சின்னத்தம்பி குணேந்திரன் [குடமியன் வரணி] சின்னத்துரை கதிரவேற்பிள்ளை [கரவெட்டி] வல்லிபுரம் பாஸ்கரன் [யாழ்ப்பாணம்] திருநாவுக்கரசு புத்திரன் [மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி] பெனடிற் அல்போன்ஸ் [1, மத்திய கிழக்கு வீதி. குருநகர்] சுபாகரன் ஞானேஸ் (அராலி.கிழக்கு அராலி) ஐயம்பிள்ளை நிருபா (கைதடி வீதி, இணுவில்) சரவணமுத்து சிறீதரன் (பழைய வாய்க்கால், மிருசுவில்) தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி (அராலி வீதி சங்கானை) பி. ராஜேந்திரகுமார் [அல்வாய்]

தொடரும்

## ஆலயங்கள் அசுத்தம்

கைதடிப்பகுதி ஆலயங்கள் அசுத்தமடைந்தும் விக்கிரகங்கள் திருடப்பட்டும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-111)

# செய்தித் துளிகள்

## விபத்தில் விரல் இழப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனப் பழுது பார்த்தல் தளத்தில் ஏற்பட்ட விபத்தில், நாவாந்துறையைச் சேர்ந்த ம. கில்பேட் (வயது 22) என்பவர் கைவிரல் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-2-6)

## தொடரும் திருட்டு

(இணுவில்)

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் அண்மைக்காலமாக துவிச் சக்கரவண்டிகள் களவு போவது அதிகரித்து வருகிறது. இந்த வரிசையில் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் 15 kg அரிசியுடன் தேநீர்க்கடைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி ஒன்று காணாமல் போயுள்ளது. (உ-49)

## திகதி மாற்றம்

(மந்திகை)

தென்மராட்சி கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை ஆசிரியர்களுக்கு நாளையும் நாளைமறு தினமும் 17, 18 ஆம் திகதி ளில் நடைபெறவிருந்த சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

[உ-23]

## இருவர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையிலுள்ள நண்பன் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட இளைஞர் புத்தூர் சந்திப் பகுதியில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படடுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த கிருஸ்ணன் சந்திரகுமார் (வயது18) என்பவரே 14 ஆம் திகதி இவ்வாறு விடுவிக்கப்பட்டவராவார்.

இதே வேளை, அளவெட்டியைச் சேந்த சின்னத்தம்பர் சிவகுருநாதர் [வயது43] என்பவர்நேற்று முன்தினம் உடுவில் இராணுவ முகாமில் வைத்து அவரது மைத்துனரின் முன்னிலையில் விடுவிக்கப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-12]

## குருநகர் அணி வெற்றி

(சுண்டுக்குளி)

யாழ் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் விளையாட்டு உத்தியோகத்தர் திருமாறன் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் குருநகர் அணி சென்னை எதிர்த்து ஆடிய ஜெட்லைன் அணியை 5;0 என்ற கோல் கணக்கில் வென்று இவ் வருடத்திற்கான சம்பியன் ஆனது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எம்.பிரான்ஸிஸ், எ.தமிழினியன், எஸ். றெட்சன் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

## சுறுசுறுப்பான கையெழுத்து வேட்டை

(ஈச்சமோட்டை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டாம் எனக் கோரி பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள கடிதத்துக்கு யாழ் மக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. (உ-59)

## வீதி பாவனையில் இல்லை

(மந்துவில்)

வரணிமகாவித்தியாலயத்தில் இருந்து வேம்பிராய் நோக்கிச் செல்லும் வீதி மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப் படவில்லை.

இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இவ்வீதியால்; இயற்றாலை, மந்துவில், மீசாலை பகுதிமக்கள் பிரயாணம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

(செ-39)

## திறன் வளர்க்கும் போட்டிகள்

(மந்துவில்)

ஐக்கிய இராச்சியத்தின்சிறுவர் பாதுகாப்பு பிரிவினரால், யாழ் மாவட்டப் பாடசாலை மாணவரிடையே கதை எழுதுதல், கதை சொல்லல் ஆகிய திறன்களை வளர்க்கும் பொருட்டு, வலய மட்டத்திலான போட்டி ஒன்றினை இன்று காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது. (செ-39)

## இட மாற்றம்

[மந்திகை]

எம். எஸ். எவ். மருத்துவ நிபுணர் குழுவின் யாழ்ப்பாணத்திற்கான இணைப்பாளரும், தொழில்நுட்பஉத்தியோகத்தருமான ஜில் இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு ஸ்ரீபன் நியமனம் பெற்றுள்ளார்.

[செ-23]

## ஜிம்னாஸ்டிக்

(ஈச்சமோட்டை)

யாழ். பல்கலைக்கழகத்தின் உடற்கல்வித்துறைமாணவர்களால் 'ஜிம்னாஸ்டிக்' நிகழ்வு அரங்கேற்றப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து அரங்கில்முற்றிலும்பல்கலைக்கழக உடற்கல்வித்துறை மாணவர்களால் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

(உ-59)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக சர்வதேச திரைப்பட விழாக்கள் பலவற்றில் பங்கு பற்றிய படமான சியாம் பெனகலின் 'மந்தான்' என்ற ஹிந்தி திரைப்படம் இன்று புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். [உ]

# க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் பாட வினாக்கள் - 02

ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc

### பல்தேர்வு வினாக்கள்

1. மீன்களின் வயதாகக் கருதப்படக் கூடியது?
   1) Cambrian 2) Ordovician 3) Carboni ferous
   4) Devonian 5) Permian
2. உயிர்ச் சுவட்டு எரிபொருள் உருவாகியது எப்போது?
   1) Cambrian 2) Ordoviclan 3) Carboni ferous
   4) Devonian 5) Permian
3. Conifers உருவாகியதும் பெரும் அழிவும் ஏற்பட்டதுமானது எப்போது?
   1) Cambrian 2) Ordoviclan 3) Carbonl ferous
   4) Devonlan 5) Permlan
4. பூக்கும் தாவரங்கள் உருவாகியது எப்போது?
   1) Triassic 2) Jurassic 3) Palae ocene
   4) Cretaceous 5) Pliocene
5. முதல் மனிதன் தோன்றியது எப்போது?
   1) Triassic 2) Jurassic 3) Palaeocene
   4) Cretaceous 5) pleistocene
6. முதல் முலையூட்டி தோன்றியது எப்போது?
   1) Triassic 2) Jurassic 3) Palaeocene
   4) Cretaceous 5) Pliocene
7. முதலில் பறவைகள் தோன்றியதும் Dinosaur ஆட்சி செய்ததுமான காலம்?
   1) Triassic 2) Jurassic 3) palaeocene
   4) Cretaceous 5) Pliocene
8. Ostracoderm ஆனது தற்கால மீன்களைப் போல இருப்பது ஏனெனில்,
   1) தாடைகளைக் கொண்டிருப்பதால்
   2) என்பாலான அகவன்கூட்டைக் கொண்டிருப்பதால்
   3) செதில்களைக் கொண்டிருப்பதால்
   4) வளையக் கூடிய முதுகுப்புற என்பால் பாதுகாக்கப்பட்ட நிலையில் முதுகுநாண் காணப்படலாகும்
   5) மேற்கூறியவை எல்லாம்.
9. Mesozoic யுகத்தில் ஏற்பட்ட பெரும் அழிவுக்குப் பின்பு மண்படையில் அதிகளவில் காணப்பட்ட மூலகம்?
   1) Argon 2) Iridium 3) Vanadium
   4) Manganese 5) Fluorine
10. இறுதியாகக் கூர்ப்படைந்த கணம்?
    1) Arthropods 2) Mollusks 3) Chordates
    4) Round worms 5) Echinoderms
11. கோடேற்றாக்களில் பூக்கள் அமைந்திருப்பது?
    1) முதுகில் 2) தலையில் 3) வாலில் 4) கழுத்தில்
    5) வயிற்றுப் புறத்தில்
12. கசியிழைய வன்கூடு தனித்துவமாக இருப்பது?
    1) Amphibians 2) Chondrichthyes 3) Osteichthyes
    4) Reptiles 5) Birds
13. இலிங்க முறை இனப்பெருக்கம் அற்ற பங்கஸ்?
    1) மதுவம் 2) Mucor 3) Agaricus
    4) Imperfectfungi 5) மேற்கூறிய எதுவுமல்ல
14. வித்து மூடியிலி அடங்குவது-
    1) மெய்ப்பாசிகள் 2) பன்னம் 3) Conifers
    4) இருவித்திலைத் தாவரங்கள் 5 ஒருவித்திலைத் தாவரங்கள்
15. கூர்ப்பில் மிகவும் முன்னேற்றமான தாவரப் பிரிவு?
    1) Cycadophyta 2) Anthophyta 3) Bryophyta
    4) pterophyta 5) Lycophyta

### மாதிரி அமைப்புக்கட்டுரை வினாக்கள்

1) புவிச்சரிதவியல் யுகங்கள் மேலும்——— ஆகப்பிரிக்கப்பட்டுள்ளது.
2) புவிச்சரிதவியல் காலங்கள்——— எனும் உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
3) ஒளித்தொகுப்பை மேற்கொள்ளவென முதன்முதலில் விருத்தியடைந்த அங்கி——— ஆகும்.
4) மெய்யான பக்ரீரியா——— என அழைக்கப்படும்.
5) யூக்கரியோட்டாவின் உற்பத்தி தற்சமயம் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ———ஆகும்.
6) ஆதியான பக்ரீரியா எனக்கருதப்படுவது——— ஆகும்.
7) ஒளித்தொகுப்பு பக்ரீரியாவில்இருந்து கூர்ப்படைந்ததாகக் கருதப்படுவது——— ஆகும்.
8) Cambrian காலத்தில்———தவிர ஏனைய பெரும்பாலான விலங்குக் கணங்களும் தோன்றின.
9) முதல் முள்ளந்தண்டுளி ———ஆகும்.
10) தரை வாழ்தாவரங்களின் மூதாதை———ஆகும்.
11) முதலில் நகருயிரி தோன்றியது——— காலத்திலாகும்.
12) ங்கசும் பூச்சிகளும் உடலைமூடி——— இனைக் கொண்டிருப்பதால் வரட்சியான நிலைமைக்கு எதிர்ப்பைக் காட்டுகின்றன.
13) Reptilia களில் தோன்றிய இயல்பு———ஆகும்.
14) enoz ic யுகத்தில்உள்ள காலங்கள்——— Quaternary ஆகும்.
15) முலையூட்டிகளில் உயர்நிலையில் உள்ள கணம்——— ஆகும்.
16) மனிதன் அடங்கும் கணம்——— ஆகும்.
17) முள்ளந்தண்டுளி விலங்குகள்என——— இனைக் கொண்டிருப்பதாலேயே உருவாகின.
18) முள்ளந்தண்டு விலங்குகளில் ———இனால் முள்ளந்தண்டுக்கம்பம் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது.
19) நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய விலங்குகள்——— ஆகும்.
20) Protists போன்ற விலங்குகள்——— என அழைக்கப்படும்.

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## வாகன உரிமையாளர் மர்ம மரணம்

இரவு நித்திரைக்குச் சென்றவர் அதிகாலை பார்த்த போது மரணமான நிலையில் காணப்பட்டார்.

வாகன உரிமையாளரான இந்நபர் இரவு வேளைகளில் வாகனத்தினுள்ளேயே படுத்துறங்குவது வழக்கமென்று சம்பவ தினமும் வாகனத்திற்குள்ளேயே படுத்துறங்கியவர் அதிகாலை வேளைமர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

பலாலி றோட், திருநெல்வேலியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின்தந்தையாரான சண்முகம் யோகநாதன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(உ-104)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன புனரமைப்பு பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெறும்.

இளைஞர் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உபதலைவர், உபசெயலாளர் ஆகியோர் இக்கூட்டத்திற்கு தவறாது சமூகம் தருமாறு இளைஞர் சேவை அலுவலகர் சு. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

(உ-6)

## இன்று ஒரு தகவல்

# தெய்வம்'ஒன்றென்றுணர்

'அரியும், சிவனும் ஒண்ணு, அறியாதவன்வாயில்மண்ணு' என்று சொல்லுவார்கள். சிவன் விஷ்ணு இருவருக்கிடையே எந்தப் பேதமும் இல்லை இருவரும் ஒருவரே என்பது தான் அதன் அர்த்தம் இந்த உண்மையை ஒரு பக்தருக்கு உணர்த்திப்பரமன் அவரை ஆட்கொண்டார்.

பண்டரிபுரத்தில் நரஹரி என்ற பொற்கொல்லர் வாழ்ந்து வந்தார். இவர் தீவிரமான சிவபக்தர். பண்டரிபுரமோ விஷ்ணு ஸ்தலம் எனவே நரஹரிவ ரவேற்று உபசரிப்பதற்குச் சிவனடியார்கள் அந்த ஊரில் இல்லை. அவர் பார்க்க வேண்டியதோ பாண்டுரங்கனை. கேட்க வேண்டியதோ ஹரிவிட்டல நாமாவளி. இதனால் எரிச்சலுற்ற அவர் செவிகளைப் பொத்திக்கொள்வார். கோவிலைச் சுற்றி வளைத்துச் செல்வார். மறந்தும் அவர் பாண்டுரங்கன் கோவிலுக்குள் நுழைய மாட்டார். பாண்டுரங்கனின் வணிகபக்தன் ஒருவன் தன் பிரார்த்தனை பலித்ததற்காகப் பாண்டுரங்கனுக்கு நவரத்தினங்கள் இழைத்த தங்க அரைஞாண் காணிக்கை செலுத்த விரும்பினான். அதற்காக அவன் பொற்கொல்லராகிய நரஹரியைத் தேடி வந்தான். நரஹரியோ பாண்டுரங்கனுடைய அளவு கொண்டு வந்தால் அரைஞாண் செய்து தருகிறேன் என்று சொல்லி விட்டார். வணிகனான அந்தப் பக்தன் நரஹரியின் விஷ்ணு துவேஷத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டான். முடிவில் அவன் கோவிலுக்குச் சென்று தானே பாண்டுரங்க விக்கிரகத்தை அளவெடுத்துக் கொண்டு வந்து நரஹரியிடம் கொடுத்தான்.

அதன் படி நரஹரியும் மிகவும் அருமையான ஒரு அரைஞாணைச் செய்து கொடுத்தார். வணிகன் அதனை மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்று கோவிலில் கொடுத்தான். விக்கிரகத்தில் அதைப் பூட்டினால் அது ஆறு விரற்கடை அளவு குறைந்தது. ஆதலால் வணிகன் மீண்டும் அரைஞாணை நரஹரியிடம் கொண்டு வந்து கொடுத்து அதைப் பெரிதாக்கித் தரச் சொன்னான். நரஹரி வணிகன் இரண்டாம் முறை கொண்டு வந்து கொடுத்த அளவின் படியே அரைஞாணைப் பெரிதாகச் செய்து கொடுத்தார். வணிகன் அதைக் கோவிலில் கொண்டு போய்க் கொடுத்த போதோ விக்கிரகத்துக்கு இப்போது அது அளவில் பெரியதாக இருந்தது. வணிகனுக்கு ஒரே வருத்தம். இது என்ன சோதனை என்று அவன் கலங்கினான். நரஹரியைக் கெஞ்சினான். 'நீங்களே வந்து விக்கிரகத்தின் அரைஞாணுக்கு அளவெடுங்கள். அப்போது தான் சரியாகவரும்' என்று வேண்டினான்.

அதற்கு நரஹரி முதலில் ஒப்புக் கொள்ள வில்லை. முடிவில் அந்தப் பக்தன் மிகவும் வற்புறுத்தியதனால் ஒருநிபந்தனையுடன் ஒப்புக் கொண்டார். அதாவது, ''என் கண்ணைத் துணியால் மறைத்துக் கட்டிக் கொண்டுதான்கோவிலுக்கு வருவேன்' என்ற நிபந்தனையை விதித்தார். வணிகன் அந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டு அவ்விதமே நரஹரியைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றான்.

வணிகன் நரஹரியைப் பாண்டுரங்கனின் விக்கிரகத்தின் முன்னால் கொண்டு போய் நிறுத்தினான். துணியால் தம் கண்களைக் கட்டியிருந்த நரஹரி விரல்களால் பாண்டுரங்கனின் இடுப்பைத் தடவினார். என்ன ஆச்சரியம் புலித்தோலை இடுப்பில் கட்டியிருந்தார் பெருமான். நரஹரி சந்தேகத்துடன் பகவானின் மற்ற அங்கங்களைத் தடவ, அங்கே உடுக்கை, மான், திரிசூலம், சடைமுடி என்று சிவபெருமானுக்கே உரிய அனைத்தும் இருந்தன.

நரஹரி, அடடா! நம் சிவபெருமான் அல்லவா; இங்கே இருக்கிறார் என்று நினைத்து தம் கண்களைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்தார். கண் திறந்து பார்த்தார். அவர் எதிரே சங்கு சக்கரத்துடன் பீதாம்பரதாரியாய்ப் பண்டரிநாதன் நின்றான். நரஹரி திடுக்கிட்டு உடனே தம் கண்களை மூடிக் கொண்டார். அவர் மறுபடியும் தடவிப் பார்த்தால் முன் போலவே சிவ பெருமானின் சின்னங்கள் அவரது கைகளில் தட்டுப்பட்டன. இறைவன் திருவருளால் நரஹரியின் அகக் கண் திறந்தது. கண்களைத் திறந்தால் பண்டரிநாதனாகவும், கண்களை மூடினால் சிவனாகவும் இறைவன் காட்சி தந்ததிலிருந்து இருவரும் ஒருவரேயென்று நரஹரி தெளிவாக உணர்ந்தார் அது காரணமாக அவர் தெய்வீகப் பரவசம் பொங்க இறைவன் திருமுன் கீழே விழுந்து வணங்கி அழுதார்.

தம்மை மன்னிக்கும் படி வேண்டிய நரஹரியின் முன்னால் பாண்டுரங்கன் புன்சிரிப்புடன் தோன்றி ''மக்கள் அறியாமையினால் சிவ விஷ்ணு பேதம் சொல்லித் தங்களுக்குள் சண்டை போடுகிறார்கள் வழிபடுகிறவர்கள் விரும்பிய படி பரம் பொருள் காட்சி தருகிறார். இறைவன் ஒருவனே'' என்று சொல்லி மறைந்தான். நரஹரி மனம் திருந்தினார்.

நன்றி
**தெய்வீகக் கதைகள்**

# நோர்வேயின் முயற்சிக்கு அவுஸ்திரேலியா ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் நோர்வே அரசு எடுத்துவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு அவுஸ்ரேலிய அரசு பூரண ஆதரவை வழங்கும்.

கொழும்பில் கடந்த புதன் கிழமைதமிழ்க்கட்சிகளைச் சந்தித்த அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகர் பீட்டர் ஹவ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது சுதந்திர தின உரையின் போது தெரிவித்த கருத்துக்கள் சமாதானம் விரைவில் மலரும் என்பதில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதென்று தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்க இலங்கை அரசாங்கத்துக்கு அவுஸ்திரேலியா அரசு அழுத்தம் கொடுக்க வேண்டுமென உயர்ஸ்தானிகர் பீட்டர் ஹவ்விடம் தமிழ்க் கட்சிகள் கோரியுள்ளன; (இ)

## இலங்கைக்கு தேவையான

# இராணுவ உபகரணங்களை வழங்க செக். பாதுகாப்பமைச்சர் இணக்கம்

(கொழும்பு)

நவீன ஆயுத உபகரணங்களை கையாள்வது சம்பந்தமாக இலங்கை இராணுவஅதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு செக் குடியரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம்தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற செக்பாதுகாப்பு அமைச்சர் இலங்கைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகளிடையேயான சந்திப்பில் இவ் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தவிர, இலங்கைக்குத் தேவையான இராணுவ உபகரணங்களை வழங்குவதற்கும் செக் பாதுகாப்பு அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சர், படைத்தளபதிகள் மற்றும் செக்கோசிலோவாக்கிய தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த புதனன்று இலங்கை வந்து சேர்ந்திருப்பது தெரிந்ததே. [உ-9]

## மணி ஒலித்து செபம்

(ஈச்சமோட்டை)

அனைத்து பேராலயங்களிலும் சிற்றாலயங்களிலும் இன்று மாலை 5.00மணிக்கு மணிகளை ஒலித்து சமாதானத்துக்காக இறைவனிடம் செபியுங்கள என யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விசேட அழைப்பொன்றை விடுத்துள்ளார். (உ-59)

## சிவராத்திரி போட்டி

[சங்கானை]

சிவராத்திரி தினத்தையொட்டி எதிர்வரும் 21ஆம் திகதி சித்தன்கேணி சிவசிதம்பரரேஸ்வரர் தேவஸ் தானத்தில் சிறந்த சமயப்போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

சித்தன்கேணி சுப்றா கல்வி நிலையத்தின் ஆதரவில் இடம்பெறும் இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தங்க வெள்ளி, வெண்கலப பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (உ-124)

## இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவரின் அடிப்படைத் தேவைகளுக்கான நிதி சேகரிக்கும் வகையில் வடமாநில இந்துமா மன்றத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இசை அரங்கம் எனும் நிகழ்ச்சி நடத்தப்படவுளளது. (உ)

## ஆங்கில வகுப்பு ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்படும் இலவச ஆங்கில வகுப்பு கடந்த 10 ஆம் திகதி முதல் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் நடை பெற்று வருகின்றது.

## சமாதானம் வேண்டி பஜனை வழிபாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் இன்று பி.ப 4. 30 மணிக்கு நாட்டில் சமாதானம் வேண்டி மாபெரும் பஜனை வழிபாடு நடைபெறவுள்ளது

யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ் வழிபாட்டை கிளரேசியன்மறைப் பணியாளர்களின் யாழ்ப்பாணக் கிளையின் அதிபர் அருட்தந்தை எஸ். றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் அடிகளார் நெறிப் படுத்துகின்றார்.

நாட்டிலுள்ள யுத்த சூழ்நிலை அகதி வாழ்க்கை என்பன நீங்கி நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படவும் சமாதானத்துக்கான அவசியத்தை நாட்டு மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவும் சமாதானத்துக்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் யாவும் வெற்றிபெறவும் இறைவனை வேண்டுவதே இப்பஜனை வழிபாட்டின் நோக்கமாகும்.

இந்நிகழ்வில் அனைத்து கத்தோலிக்க சகோதரர்களையும் ஏனைய சமாதானம் விரும்புவோரையும் தவறாது கலந்து கொண்டு சமாதானத்துக்காக இறைவனிடம் உருக்கமாக பிரார்த்திக்கும்படி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-59)

# சோ. கா. தொல்பொருள் வன்னியில்கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அக்கராயன், அம்பலப்பெருமாள் காட்டுப் பகுதிகளில் சோழர்கால கட்டுமாணப் பொருளான சுண்ணச் சுதை தயாரிப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுஆர்வலர் கு மேகநாதன் தொல்பொருள் தேடலின் போது இச் சுதைத் தயாரிப்பு இடங்களை கண்டு அறிந்துள்ளார்.

அக்கராயன் அம்பலப் பெருமாள குளத்திற்கு அருகே காட்டுப்பகுதியில் பத்திற்கும் மேற்பட்ட இடங்களில் சுண்ணச் சுதை தயாரிக்கப்பட்ட இடங்களையும் எச்சங்களையும் கண்டு அறிந்துள்ளனர்.

எட்டாம்கட்டை குளம் புனரமைக்கப்பட்ட பொழுது அதன் அணையின்அடியில் சுண்ணச் சுதையினால் கட்டப்பட்ட குளக்கட்டுமாணமும் இவரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இக்குளத்தின் அலைகரையின் பின்னால் சுமார் ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் சுதை தயாரிப்பிடங்கள் காணப்படுகின்றது.

அக்கராயன், பல்லவராயன் ஆகியபெயர்கள் சோழர்களின் தளபதிகளுக்குரியவையாகும்.

ஈழத்தமிழர்களின் வாழ்வில் சோழர்களுடைய வருகை கட்டு மாணங்களில் மாற்றத்தை கொண்டு வந்ததால், இச்சுதை சோழர்காலத்தவை என ஊகிக்க முடிவதாக இவர் தெரிவித்தார். (செ)

# ஆலயத்தின் பெயரில் பணம் சேர்க்கும் பிரகிருதிகள் பெருக்கம்

(ஆவரங்கால்)

ஆலயத்தின் பெயரைக் கூறி பணம் சேர்க்கும் கில்லாடிகளின் தொகை யாழ் நகரப் பகுதிகளில் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில், இறைபக்தர் போல் வேடமிட்ட சிறுவன் ஒருவன் அம்மனின் பெயரைக் கூறி பணம் சேர்த்த வேளை சந்தேகம் கொண்ட சிலர் விளக்கம் கேட்ட போது, சிறுவன் தப்பினோமா பிழைத்தோமா என ஓட்டம் பிடித்த சம்பவம் நேற்று முன்தினம் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (உ-57)

## விடுதலைப்புலிகளின்

# முக்கிய உறுப்பினர்களைச் சந்திக்க சர்வமதக் குழு வன்னி பயணம்

(கொழும்பு)

சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை வன்னிக்குச் செல்லவுள்ளது.

சகலமதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்கள் முப்பது பேர் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இலங்கையில் நிலவி வரும் இனப் பிரச்சினைகள் குறித்து சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் உள்ள தடைகளை நீக்கும் வகையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே இக்குழுவினர் வன்னி செல்லவுள்ளனர்.

இக் குழுகடந்த வருடம் ஜனவரி மாதம் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களான கரிகாலன், தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

அதன் பின்னர் இக் குழு வன்னிக்குச் செல்வதற்கு பல முறை முயற்சித்த போதும், இப்பொழுதுதான் இதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

இச் சர்வமதக் குழுவினர் வன்னி சென்று திரும்பியதும் ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளனர், (செ)

# காபூலில் உள்ள ஐ.நா.சபை அலுவலகத்தை மூடவும் தலிபான் அரசு உத்தரவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் அமைந்துள்ள ஐ நா சபை அலுவலகத்தை மூடுமாறு தலிபான் அரசு கூறியுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள தலிபான் அலுவலகத்தை மூடுமாறு அமெரிக்கா உத்தரவிட்டதற்குப் பதிலடியாகவே இந்த நடவடிக்கையை தாலிபான் அரசு எடுத்துள்ளது.

நியூயோர்க்கிலுள்ள ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய அலுவலகம் மூடப்பட்டால் ஐ.நா.சபையின் அலுவலகம் தமது நாட்டிற்கு தேவையில்லை என்றும் இவ் அரசு கூறியுள்ளது.

காபூலில் ஐ நா சபை அலுவலகம்மூடப படுவதை தடுக்க முடியாது போய்விடுமோ என்று ஐ நா.பிரதி நிதி ஒருவர் கவலை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது (செ)

# பா. ம. க. இரண்டாக பிளவுறும் மாநில தலைவர் கிருபாநிதி ஆருடம்

(சென்னை)

தேசிய ஜனநாயககூட்டணியில் இருந்து விலகி அ. இ. அ. தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பா.ம.க இரண்டாக உடையும் நிலையில் உள்ளதாக பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் டாக்டர் கிருபாநிதி நிருபர்களுக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் தேசிய ஜனநாயக கூட்டணியில இருந்து பா.ம.க விலகியது அக்கட்சித் தொண்டர்களுக்கு பிடிக்கவில்லை.

அத்துடன் பா.ம.க எம்.பி களும் இதனை விரும்பவில்லை எனதான் கருதுவதாகவும் இந் நிலை பா.ம.கவை இரண்டாக உடைய வழி வகுக்கும் எனவும் அவர் அப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். (உ-9)

# உக்ரைன் ஜனாதிபதியை பதவி விலகக் கோரிக்கை

(கீவ்)

உக்ரைனில் பத்திரிகையாளர் ஒருவர் காணாமற்போனமையைத் தொடர்ந்து உக்ரைனிய ஜனாதிபதியை பதவி விலகவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று உக்ரைன் ஜனாதிபதி லெனோய்ட் குச்சாய்க்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்கள்.

உக்ரைன் இவ் ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு பொலிஸ் நகரமக மாறிக் கொண்டு வருகிறதெனவும் ஜனாதிபதியை வெளியேறுமாறும் மக்கள் கோஷம் எழுப்பினர்.

இது ஜனாதிபதிக்கு எதிரான இரண்டாவது ஆர்ப்பாட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# பங்களாதேஷ் பிரதமரை பதவி விலகக் கோரி வேலைநிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹஷீனா ராஜினாமா செய்யவேண்டுமெனக் கோரி பங்களாதேஷில் வேலை நிறுத்தப்போராட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

பங்களாதேஷ் பிரதமர் ராஜினாமா செய்து விரைவில் தேர்தலை நடத்தக் கோரி போம்காலிதா ஸியா தலைமையில் நான்கு எதிர்க்கட்சிக் கூட்டணிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

1996 ஆம் ஆண்டு ஹஷீனா பிரதமராகப்பதவி ஏற்ற பின்னர் எதிர்க்கட்சிகள் 75 இற்கு மேற்பட்ட வேலை நிறுத்தங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

# ஈராக்- சிரிய விமான போக்குவரத்து ஆரம்பம்

(பக்தாத்)

ஐ. நாவின் தடையையும் மீறி டமாஸ்கஸ் சென்றிருந்த ஈராக்கிய விமானம் ஒன்று மீண்டும் பக்தாத் திரும்பி உள்ளது.

கடந்த இருபதாண்டுகளின் பின்பு நடைபெறும் முதலாவது விமானப்போக்குவரத்து இதுவாகும். ஐ. நா. தடையையும் மீறி இந்த ஜம்போ ஜெட்விமானம் பக்தாத்திலிருந்து சிரிய தலைநகர் டமாஸ்கஸ் சென்றுள்ளது.

அங்கிருந்து சில பிரயாணிகளையும் அது பக்தாத் ஏற்றி வந்துள்ளது.

இச்சம்பவத்தை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்ததுடன் ஐ. நா. பரிசோதனைக்கு உட்படாமல் பக்தாத்துக்கும்டமாஸ்கஸ்ஸிற்குமிடையே விமானப் போக்குவரத்து நடத்துவது முறையல்ல எனவும் கூறிஉள்ளது.

ஏற்கனவே எகிப்து ஜோர்டான் ஆகியநாடுகள் ஈராக்குடன் விமானப் போக்குவரத்து நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஐ.நா சமாதான படையினரிடம் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் ஒப்படைப்பு

[லண்டன்]

கடந்த வருடம் மே மாதத்தில் சியாராலியோனில் ஐ.நா சமாதானப் படையினரிடம் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களை புரட்சிகர ஒருங்கிணைப்பு போராட்டஅமைப்பு மீளவும் ஒப்படைத்துள்ளது.

கடந்த வருடம்மே மாதம், 500 ஐ.நா.சமாதானப் படையினரை புரட்சிகர ஒருங்கிணைப்பு போராளிகள் பணயக் கைதிகளாகப் பிடித்த சம்பவத்தில் கைப்பற்றிய ஆயுதங்களையே போராளிகள் கையளித்துள்ளனர்.

சியாரா லியோனில் பணியாற்றும் ஐ நா சமாதானப் படை அதிகாரி டானியல் ஓபான் டேயிற்கும் புரட்சிகர ஒருங்கிணைப்பு போராளிகளின்தலைவர்இஸாரே சேயிற்குமிடையில் கடந்த திங்களன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினை அடுத்தே ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. [உ-9]

# பருக் அப்துல்லா பதவி விலக வேண்டும் சிவசேனா போர்க்கொடி

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் தீவிரவாதிகளிடம் இருந்து சீக்கியரை பாதுகாக்கத் தவறிய பருக் அப்துல்லாவின் அரசை நீக்க வேண்டும் என்று சிவசேனா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் காஷ்மீரில் சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லி பாராளுமன்ற வளாகத்தில் சிவசேனா கட்சியினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திஉள்ளார்கள்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது பாகிஷ்தானுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பருக் அப்துல்லா கையாலாகாதவர் எனக் கூறி அவரது கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

அத்துடன் காஷ்மீர் மாநிலத்தில் தொடரும் போர் நிறுத்த அறிவிப்பை மத்திய அரசு வாபஸ்பெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-9)

# புனித யுத்த நிதி சேகரிக்க பாக். தடை

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தானில் புனித யுத்தத்துக்கென நிதி சேகரிப்பதற்கு தடை விதித்த பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்களின் முடிவை அங்குள்ள தீவிரவாத அமைப்புக்களும் இஸ்லாமியக் குழுக்களும் கண்டித்துள்ளன.

காஷ்மீரில் இந்திய ஆட்சி ஏற்படுவதை தடுக்க தாம் மேற்கொள்ளும் புனித யுத்தத்திற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கே மக்களிடம் தீவிரவாதக்குழுக்கள் நிதி சேகரிக்கின்றன.

இந் நிதி சேகரிப்பை தடை செய்துள்ள பாகிஸ்தானிய உள்த்துறை அமைச்சர் மொய்னுதீன் ஹெய்தரின் அறிவிப்பு இஸ்லாமுக்கு எதிரானது என்று தீவிரவாத அமைப்புக்கள் குற்றம் சாட்டி உள்ளன. [உ-9]

# சேர்பியர் சென்ற பஸ் வண்டி மீது அல்பேனியர் தாக்குதல்

(ஸ்ட்ரிபி)

சேர்பியர்கள் பயணம் செய்த பஸ் ஒன்றிற்கு கொஸோவோவில் உள்ள சர்வதேச சமாதானப் படையினர் பாதுகாப்பு வழங்கிச் சென்றவேளை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இச்சம்பவத்தில் பஸ்ஸிலிருந்த ஒரு பிரயாணி கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவர்களுடன்நேட்டோ சமாதானப் படை வீரர் ஒருவரும் காயமுற்றுள்ளார்.

நூற்றுக்கணக்கான அல்பேனிய எதிர்ப்பாளர்கள் இணைந்து இத்தாக்குதலை மேற்கொண்ட போதிலும் ஐவர் மட்டுமே கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர் (உ-9)

## செய்திப்பரல்

★ முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி எஸ்ராடாவின் வங்கிக் கணக்கில் இருந்து ஒரு கோடியே 53 லட்சம் டொலர் பணம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

★ சர்ச்சைக்குளளான 'சோரி சோரி சுப்கே சுப்கே' படத்தை திரையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தி.மு.க ஆட்சியில் இருக்கும் வரைவீரப்பன் தொடர்பான விடயங்கள் வெளிவராது என துக்ளக் ஆசிரியர் சோ தெரிவித்துள்ளார்.

★ ஈரானின் கடும் போக்கு நீதிமன்றம் அப்பாஸ் டால் வன்ட் என்ற பத்திரிகையாளருக்கு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

★ அவுஸ்திரேலிய விளையாட்டு வீரர் சஷா எல்டர் மானுக்கு 40 இலட்சம் நட்ட ஈடு வழங்க இஸ்ரேலிய அரசு முன்வந்துள்ளது. [உ-9]

# ஆஸி. நியூசிலாந்திற்கிடையே கருத்து முரண்பாடுகள்

(கன்பரா)

நியூஸிலாந்திலிருந்து விசா இன்றிஅவுஸ்திரேலியாவிற்குள் நுழைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இவ்விரு நாடுகளிடையேயும் கருத்து முரண்பாடுகள் நிலவுகிறது.

அருகருகே உள்ள இவ்விரு நாடுகளும் தங்களது நட்புறவை பலப்படுத்துவதற்காக தங்களிடையே ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தனர்.

அவ்ஒப்பந்தத்தின்படி நியூஸிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு விசா இன்றியே செல்ல முடியும்.

அதே போல் அவுஸ்திரேலியாவில் இருந்து நியூஸிலாந்திற்கும் விசா இன்றி செல்ல முடியும்.

அவுஸ்திரேலியா செல்ல விரும்புபவர்கள் குறுக்கு வழியாக நியூஸிலாந்து சென்று குடியுரிமை பெற்று அங்கிருந்து விசா இன்றியே அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து விடுகிறார்கள்.

இப்படி நுழைந்தவர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சமாக அதிகரித்துள்ளது.

அத்துடன்,

பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் எளிதாக நியூஸிலாந்துநாட்டிற்கு விசா பெற்று அங்கிருந்தவாறே விசா இன்றி அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து விடுகிறார்கள்.

இத்தகைய காரணங்களே அவுஸ்திரேலிய அரசை கோபமடையச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [செ]

# அனுமதி அட்டைகளை செயலகத்தில் பெறுக

(யாழ்ப்பாணம்)

மத்திய அரச சேவையில் எழுதுநர் மற்றும் கணக்குப் பதியுநர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 24 ஆம் திகதி நடை பெறவுள்ளதால், இதுவரை நேர்முகத் தேர்வு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாதவர்களை அதற்கு முன்னதாக யாழ். செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## தாயும் மகனும் பலி

வலஸ் முல்லைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது கற்பாறையொன்று உருண்டு விழுந்ததால் வீட்டில் இருந்த தாயும் 3 வயது மகனும நசியுண்டு இறந்த பரிதாபச் சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம் பெற்றுளளது. (உ-9)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்க செயற்குழுக் கூட்டம் நாளை பி ப 3.00 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில்இடம்பெறும். [உ]

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று மு.ப 9 மணிக்கு யா. இந்துக்கல்லூரி மைதானத்தில் அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், இந்துஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் மு.திருஞானசம்பந்த பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார் [உ-111]

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்

குறள்

## வலம்புரி

### குரங்கு(கள்) ஆட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம் மேடைகளில் பார்த்திருக்கிறோம். குரங்கு [கள்] ஆட்டம் என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்க வாய்ப்பில்லா விட்டாலும் யாழ்ப்பாண யாநகர சபையில் தற்போது அது நடந்துகொண்டிருக்கிறது.

ஏதோ புதுத்துடபுத்தடி நன்றாகக் கூட்டும் என்பது போல புதிதாக வந்தவர் (கள்) குப்பையைக் கூட்டுவதற்குப் பதிலாகக் குண்டு மணியைக் கூட்ட வெளிக்கிட்டு விட்டார். அதன் விளைவு கடந்த பத்து வருடங்களாக யாழ் நகரப் பகுதியில் தனிப்பெரும் சேவை ஆற்றிய யாழ். மாநகர சபையின் சுகாதாரவைத்திய அதிகாரியின் சேவையை இழக்கப் போகிறது.

விமானக் குண்டுவீச்சுக்கள், இடம் பெயர்வுகள் என்று எத்தனையோ இன்னல்களின்மத்தியிலும் சளங்கமற்ற சேவை ஆற்றிய யாழ். மாநகரசபையின் முன்னாள்ஆணையாளரும் தற்போதைய வடக்கு - கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான வே. பொ.பாலசிங்கத்தின் சேவையை கொச்சைப்படுத்தி ஏதோ புதியவர் தனக்குக் கிடைத்த புதுக்கதிரையை 'அந்தமாதிரி அலங்கரிக்கிறார்' என வழமையான வால்பிடிக் கூட்டத்தின் 'பராக்'கில் கண் மண் தெரியாமல் நடப்பது புதியவருக்கு அவ்வளவு நல்லதல்ல. ஏனெனில் அவரின் எதிர்காலம் இதைவிட மோசமாகப் போகலாம் என்பதை உணர்வதும், வந்த பதவி ஆணையிடுவதாக இருந்தாலும் எழுந்து நின்று அர்த்த சாமத்தில் குடைபிடிப்பதும் நல்லதல்ல.

அதேவேளை யாழ்ப்பாணத்தமிழர்கள் கடந்த பலவருடங்களாக பாணா பணிஸா சாப்பிட்டார்கள் என்பது பற்றி எதுவும் தெரியாமல் இருந்தாலும் புதிய மேயர்- திருமதி யோகேஸ்வரனதும் சிவபாலனது மரணங்களால் பெற்ற பரிசை புக்குவமாக நடத்துவார் என்ற நமபிக்கை இன்னமும் மக்கள் மத்தியில் வீண்போகாமல் உள்ளது. ஆனால் புதிய ஆணையாளர் பெண் ஊழியர்களை தகாத', வார்த்தையால் பேசுவதை பார்த்துக் கொண்டிருந்தால் போட்ட நான்கு வாக்கும் போக்கணம் கெட்டுப் போய்விட்டது என்ற முடிவை எடுக்கவேண்டியும் வரலாம்.

---

திறனாய்வுக்களம்

# முகாம் வாழ் மக்களின் மனங்களைச் சுண்டிய "எங்களை விடுங்கோ" எனும் தெருவெளி நாடகம்

இதுவரை காலமாக நாங்கள் படும் கஸ்டங்களை எமக்குள் அடக்கி வைத்தோம். ஆனால் இன்று நடந்த 'எங்களை விடுங்கோ' தெருவெளி அரங்கு மூலம் நாங்கள் எங்களையே கண்டு கொண்டோம். இதன் மூலம் நாம் இன்றிலிருந்தே விழிப் படைகிறோம்.

அண்மையில் சுன்னாகம் சபாபதி முகாமில் உள்ள மயிலிட்டி மக்கள் முன்னிலையில், ''எங்களை விடுங்கோ'' எனும் கருப்பொருளாகிய தெருவெளி அரங்கொன்று, றெஜினோல், யசோதா ஆகியோரால் வழங்கப்பட்டது. பெருமளவு பார்வையாளர் மத்தியில் உணர்வு பூர்வமாக அங்கு வாழும் மாணவர்களைக் கொண்டே மேற்படி அரங்கு போடப்பட்டது. இதன் போதே அம்மக்கள் தம் கருத்துகளை மேற் சொன்னவாறு அழாத குறையாகத் தெரிவித்து, அதிலிருந்து விடுபடத் தவிர்த்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

### பழைய வாழ்க்கை

மயிலிட்டி மக்களது முக்கிய கடல் தொழில் செயற்பாடுகளை நன்றாக அங்குள்ள மாணவர்கள் செய்தார்கள். இதனால் பழைய வாழ்க்கைக்குள் அவர்கள் இட்டுச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

நீண்ட காலமாக இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் தங்கிவந்த மக்கள் தற்போது சபாபதி முகாமில் பல்வேறு இக்கட்டான நிலைகளில் தங்கியுள்ளார்கள். நூற்றைம்பது குடும்பங்கள் கொண்ட அம்மக்களுக்கு சில குழாய்க் கிணறுகளும், சில மலசலகூடங்களுமே இருப்பதால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளும், நிவாரணப் பொருட்கள வழங்கும் போது ஏற்படும் ஊழல்களும், சினிமாப் படங்களும் அதனால் இளஞ் சமுதாயம் படும்பாடுகளும், அதற்கப்பால் அரக்கத்தன்மையான செயல்களும், அவர்களை விரக்தியான தன்மைக்கு இட்டுச் சென்றது மட்டுமன்றி, சமுதாயச் சீர்கேட்டுக்கும் வழிவகுத்து விட்டது. மேலும் குடும்பத் தகராறுகள், அடிபிடி சண்டைகளைத் தாண்டிக் குடிப்பழக்கத்திற்குள் தள்ளாடும் அவல நிலைமைகளும், அம்மக்களை எங்கேயோ இழுத்து செல்கின்றது. காலகாலமாக, அரக்கச்செயல்களாலான திணிப்புக்களுக்குள்பலியாகி, நொந்து வந்த மக்கள், புரட்சி நடைபோட்டு, எத்தடைகளையும் வென்று இன்று தமது ஒரே குறிக்கோளாக ''எமக்கு ஒன்றும் வேண்டாம். எங்களை சொந்த ஊரான மயிலிட்டிக்கு விடுங்கோ, அதுவே போதும்'' எனக்கூறி, தடைகளை வென்று மயிலிட்டியைச் சென்றடைகிறார்கள். இக்கட்டத்தில் அனைத்து மக்களுமே ஆரவாரத்தோடு அதனை வரவேற்றார்கள். மகிழ்ந்து துள்ளுகிறார்கள். இக்காட்சியை யாழ். நாடக அறிஞர்கள் பலர் கண்டுகளித்தார்கள்.

**வ. சசிகுமார்**
(மல்லாகம்)

மயிலிட்டி மக்களது அவல வாழ்வையே அழகாக அனைவரும் நுகரும் வண்ணம் நெறியாளர் செய்தமையை இட்டு, அம்மக்கள் போற்றிப் பரவினார்கள். ஏற்ற இடங்களில் தெருக்கூத்துப் பாடலும், அதனை தொட்டு வந்த இசையும் பின்னணி கோரசும் வேட உடை ஒப்பனையும் இந்த தெருவெளி நாடகத்தை மெருகூட்டிற்று.

### மக்களின் அபிப்பிராயம்

இறுதியாக இந்நாடகம் சம்பந்தமாக பொது அடிப்படையில் மக்களது அபிப்பிராயங்கள் பலவற்றை அந்நெறியாளர்கள் நேரடியாகக் கேட்டபோது பலர் முன் வந்து தங்களது தேவைகள், பிரச்சினைகளை கூறினார்கள். அதாவது தினமும் படம் பார்ப்பதை விட்டு மாணவர்களின் ஆக்க ஊக்கங்களுக்கு சனசமூக நிலையத் தலைவர் மூலம் வழி சமைப்போம் எனவும்இத்தகைய விழிப்படையும் நிகழ்ச்சிகளை குறிப்பாக நாடகங்களை ஏற்றுக் கொள்ளவும் தயார் எனப் பலர் கூறி உடனேயே முடிவும் எடுத்தார்கள். வேறு சிலரிடம் ''நீங்கள் இந்நாடகம் மூலம் என்ன கண்டீர்கள்'' என கேட்ட போது அவர்கள் ''ஐயா நாங்கள் பல வருடமாக படும் அவலங்கள் சொல்லில் அடங்காது. இடத்திற்கு இடம் பல சொத்துக்களை இழந்துவெறும் உடைகளுடன் வந்து காலம் கழிக்கும எமது நிலைமையை எண்ணும் போது உண்மையில் அழுகின்றோம். மேலும் நாங்கள் இம்முகாமில் மிகவும் அடைபட்டு. சுதந்திரமாக கதைக்க வழி இல்லாமல் கூட கஷ்டப்படுகின்றோம். இந்த வாழ்வு எமக்கு தேவைதானா...? என கூறினார்கள்.

### ஆறுதலாவது பெறலாம்

இன்னொரு சிலர் ''நாங்கள் ஒற்றுமையாக சேர்ந்து எங்கள் ஊருக்கு போவதற்கு என்ன வழி என்றே தெரியவில்லை. ஆயினும் அங்கு போக எத்தனிக்க ஆரம்ப காலத்திலேயே எங்கள் பிள்ளைகள் பலரை இழந்தோம் இனி அவற்றை எண்ண . துன்பமாக இருக்கிறது'' மேலும் எங்கள் முகாம் மக்கள் அடிக்கடி விழிப்புடனும், நல்நிலையுமடைய எங்கள் ஒத்துழைப்புடன் இத்தகைய நாடகங்களை போட்டு ஆறுதல் படுத்துவீர்களானால் அதுவே பேருதவி. அந்த வகையில் இந்நாடக செல்வங்களை நாம் எல்லோரும் போற்றுகிறோம் என மயிலிட்டி மக்கள் கூறி வாழ்த்தினார்கள்.

---

# உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு நூறுமில்லியன் கடன் உதவி

[கொழும்பு]

இலங்கைக்கு இந்த வருடம் இந்தியா 45 மில்லியன் டொலர் கடனாக வழங்கியுள்ளது.

கடந்த வருடம் யூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கைக்கு அவசர உதவியாக இந்தியா நூறு மில்லியன் டொலரை கடனாக வழங்கும் என அறிவித்திருந்தார்.

ஆனால்இக்கடன் உதவியை இலங்கையரசு ஆயுதக் கொள்வனவுக்கே பயன்படுத்தும் என இந்தியாவின் ஆளும் தேசிய முன்னணியில் அங்கம் வகித்த பல கட்சிகள் கடன் வழங்கலுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

இதனையடுத்து இக் கடன் உதவியை எவ்வாறு இலங்கை பயன்படுத்த வேண்டும் என சில விதிமுறைகளை வகுத்து, அதற்கு இலங்கை அரசுஉடன் பட்டதையடுத்து மூன்று கட்டமாக, மூன்று வருடத்தில் இக் கடன் உதவியை வழங்க தீர்மானித்தது.

இதற்கமைய இவ் வருடம் 45 மில்லியன் டொலரும், அடுத்த வருடம் 35 மில்லியன் டொலரும் 2003ம் ஆண்டு 20 மில்லியன் டொலரும் கடனாக வழங்கப்படும்எனதெரிவித்திருந்தது.

இந்தக் கடனில் எவ்வகைப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும்இதில் இந்திய அரசின் தேவைகளை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் இரு தரப்பும் ஏற்கனவே உடன்பட்டுள்ளனம குறிப்பிடத்தக்கது. [செ]

## ஊனமுற்ற மாணவர் விபரம் சேகரிப்பு

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் பெற்றோரை இழந்த உடல் ஊனமுற்ற முகாம்களில் தங்கி வாழும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாகக் கோரப் பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் இவர்களுக்குக் கிடைக்கவுள்ளதாகவும் விபரங்கள் இம்மாதம் ஆம் திகதிக்கு முன்பாக யாழ். திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-79)

## கதிர்காமகோபுரம் ஊடாக புலிகள்தொலைத்தொடர்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள புலிகள் செலூலர் தொலைபேசி அழைப்புகளைப் பெறுவதற்கு, கதிர்காமப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்தை பயன்படுத்தி வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புலிகள் தமது முகாம்களில் இருந்தவாறு இந்தத் தொலைபேசிக் கோபுரம் ஊடாக வெளிப்பிரதேச தொலைபேசி அழைப்புகளைப் பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## செக்.குடியரசால் படையினருக்கு நவீனபயிற்சி

(கொழும்பு)

செக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையில் கொழும்பு வந்தகுழுவினர் நேற்று முன்தினம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது இலங்கை இராணுவத்தினருக்குநவீன ஆயுதங்களைக் கையாள்வதில் பயிற்சிகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுளளது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்றஇப்பேச்சுவார்த்தையின்போது நவீனஆயுதங்கள் வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (வ)

## சிறைக்கைதிகளுக்கு உணவாக மணல்சோறு

(கொழும்பு)

கடற் படையினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களுக்கு மணல் கலந்த சோறு வழங்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப் படுகின்றது.

பெப்ரவரி 4 ஆம் திகதி தமிழக மீனவர்கள் நால்வர் இராமேஸ்வரம் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது படகு பழுதடைந்ததனால் நீரோட்டத்துடன் இலங்கை கடற்பரப்புக்குள் படகு இழுத்து வரப்பட்டது.

இப்படகில் இருந்த நான்கு மீனவர்களையும் கைதுசெய்த இலங்கை கடற்படையினர் இவர்களை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பின்னரே இவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் இழிவாக நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர். [செ]

### கடற்படை தளபதி இந்தியா பயணம்

இந்தியாவின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் கடற்படைத் தளபதி அட்மிரல்டீ. டபிள்யு. கே. சந்தகிரி விமானம் மூலம் மும்பைபோய்சேர்ந்துள்ளார்.

இவ் விழாவில் கலந்து கொள்ளவசதியாக இலங்கைக் கடற்படைக்குச்சொந்தமான கப்பலொன்றும் மிகுந்தபாதுகாப்புடன் மும்பாய் போய் சேர்ந்துள்ளது. (இ)

சாரங்கனின்
விஷேட விலைக்கழிவு
இன்று முதல் 07/03/2001
வரை உங்கள் ஓடர்களை
முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்
**சாரங்கன் நகைமாடம்**
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1503]

### கலாநிதிதணிகாசலம்பிள்ளை நேரில்விஜயம்
# வடமராட்சி பாடசாலைகளை
# மீண்டும் இயக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி கிழக்கிலுள்ள மக்களின் இடம்பெயர்வையடுத்து இயங்காமல் இருந்த அப் பகுதிப் பாடசாலைகளை இயக்குவதற்குரிய நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளைநேற்று வடமராட்சிக்கு நேரில் சென்று இயங்கமுடியாத பாடசாலைகளை இயக்குவதற்குரிய நடவடிககைகளை மேற்கொண்டார்.

இதன் பிரகாரம்,
★ நாகர்கோவில் அ.த.க பாடசாலை - குடத்தனை அ.த.கவுடனும்,
★ செம்பியன்பற்று அ.த.க- தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்துடனும்,
★ உடுத்துறை ம.வி; - அம்பன் வித்தியாலயத்துடனும்,
★ மருதங்கேணி இந்துத.க. பாடசாலை-அல்வாய்வடக்கு வித்தியாலயத்துடனும்,
★ தாளையடி றோ. க.- புலோலி மெ.மி.த. க. பாடசாலையுடனும்,
★ ஆழியவளை சி.சி.ரி.எம்- செம்பியன்பற்று றோ.கவுடனும் இணைந்து செயற்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளை இயக்குவது தொடர்பாக கலாநிதி தணிகாசலம்பிள்ளையின் தலைமையில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தில் வடமராட்சிகல்வி வலயப்பணிப்பாளர்சிவராஜா மேலதிக மாகாண கல்விப் பணிமனையைச் சேர்ந்த க. கனகசிங்கம்,தமிழர் ஆசியர் சங்க துணைப் பொதுச் செயலாளர் க. பஞ்சலிங்கம் மற்றும் பெற்ரோர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலைகளை இயக்குவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ' ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் விசேட நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1500]

## சிவராத்திரி தினத்தன்று ஊரடங்கை தளர்த்துக

(தென்மராட்சி)
சிவராத்திரி தினத்தன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் பக்தர்களின் நன்மை கருதி இரவு நேர ஊரடங்குச் சட்டத்தினை தளர்த்த உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ளும்படி அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமப்பு அமைச்சரும் இந்து கலாசார அமைச்சருமான கே என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு அவசர கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இச்சங்கத்தின் செயலாளர் செ.கந்தசத்திய தாலுனால் கை யாப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம்மகஜரில்-சிவராத்திரிதினத்தன்று பக்தர்கள் நிம்மதியும் அமைதியும் தரக்கூடிய சூழ்நிலையில் வழிபாடு ஆற்றுவதற்குஉதவும் படியும் கேட்டுக் கொள்ளப் பட்டுளளது. (ந-77)

## மிதிவெடியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)
மட்டுவில் பகுதியில் தேங்காய் எடுக்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கி இடது காலை இழந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டுள்ளார். மார்க்கண்டு சந்திரகுமார் (வயது 21) என்பவரே காலை இழந்தவராவர்.
[ந-12.111[

### இராணுவத்தின்

படுத்தப்பட்டதாகவும், பின் அவரது வீடும் சோதனை இடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்சிச் சூட்டுக்குப் பலியான இளைஞனின் சடலம் கோப்பாய் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-12)

### வவுனியா

லகத்தைச் சென்றடையும். இதில் சகலமதத்தலைவர்கள், மற்றும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சமாதானப் பேரணிக்கு முன்பதாக ரம்பைக் குளம் தேவாலயத்தில் சர்வ மதத் தலைவர்களும் பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர்.

இதே வேளை மன்னாரில் இடம்பெறவுள்ள சமாதானப் பேரணி மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு யோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

நானாட்டான், உயிலங்குளம் பகுதியில் உள்ளவர்களும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையைச் சேர்ந்த10 பௌத்த மதகுருமார்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

### பிரித்தானிய அரசு

கொழும்பில் 11 தமிழ்க் கட்சிகள் அரசு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை வலியுறுத்தி வருவதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

11தமிழ்க்கட்சிகளின் இந்த நடவடிக்கையானதுவிடுதலை புலிகளின் நிலைப்பாட்டிற்கு தமிழ்மக்கள் அணிதிரண்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

பிரித்தானிய அரசுஇலங்கையின் வேண்டுகோளைஏற்று விடுதலைப்புலிகளை தடை செய்யக்கூடாது தப்பித்தவறி தடை விதிக்கப்பட்டால் சமாதானப்பேச்சு அடியோடு முறிந்துவிடும்.

பிரித்தானியாவின்நடுநிலைதான்இப்பிரச்சினையைதீர்க்க உதவுமென பிரித்தானிய அரச அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளோம். இந்நிலையில் பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தடை செய்யமாட்டாது என திடமாக நம்புகிறேன் என்று அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை அரசு யாழ்ப்பாணத்தில் அதிகளவுஇராணுவத்தினரையும், கனரக ஆயுதங்களையும் யுத்த முனையில் குவித்து வருவதால் கடுமையான யுத்தம் ஒன்று வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். [வ]

### மின்சார ---

யுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐ ரி.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி மின்சார சபையைக் கடுமையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தையே மின்சார சபைக்குப் பொறுப்பான அமைச்சர் என்பதும், ஜனாதிபதியின் இப் பேட்டியானது அமைச்சரைத் தாக்குவதாக அமைந்துள்ளதாகவும், அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

### புலிகளை ---

போவதில்லை, பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தி நாட்டின் ஒருபகுதியினை அவர்களிடம் நிர்வகிக்கஅரசாங்கம்எப்படிக் கொடுக்க முடியுமென்றும் கேள்விஎழுப்பிய மன்னார் ஆயர் விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று பிரித்தானியாவிடம் அரசாங்கம் விடுத்துவரும் கோரிக்கையை நிறுத்த வேண்டு என்றும் அவர் கேட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இருதரப்பினரும் சமாதான நிலையிலிருந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் அதனை விடுத்து விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்திவிட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுவொன்றினைத்திணிக்கலாம் என்று அரசாங்கம் எண்ணக்கூடாது அவ்வாறு எண்ணினால் யுத்தமும் அழிவுமே மிஞ்சும் என்றும் ஆயர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

### மெய்வல்லுநர்போட்டி

யாழ். நடராஜராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நிகழ்வுகள் இன்று பி.ப 2 மணிக்கு அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உடல் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த. அருணகிரிராஜாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும் யாழ். மாவட்ட மேல்நீதி மன்றப் பதிவாளர் நா. அண்ணா இராசேந்திரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-49)

### இளைஞன் ---

கையிலும் காலிலும் சிறுகாயம் அடைந்து அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கனகரட்ணம் வீதி அரியாலையைச் சேர்ந்த தர்மரட்ணம் கோகேஷன் (வயது-20) என்பவரே காயமடைந்தவராவர். (ந-12(

### கைகள் ---

போது பற்றைக்குள் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையிலும்,முகம் சீலைகளால் மூடிக் கட்டிய நிலையிலும் இரத்தத்துடன்சடலமொன்று கிடப்பதைக் கண்டு அயலவர்க்குத் தெரிவித்தான். அதனைத் தொடர்ந்து அயலவர்கள் சடலம் கிடந்த இடத்திற்குச்சென்று பார்வையிட்டனர்.

இச்சடலத்தின் கழுத்து வயறினால் சுற்றி நெரிக்கப்பட்டு இருப்பதாகவும், வயர் அருகில் இருக்கக் காணப்பட்டதாகவும் சடலத்தைப் பார்த்தவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இச்செய்தி எழுதும் வரை சடலத்தை எவரும் பொறுப்பேற்கவில்லை. இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் மத்தியில்அச்சம் நிலவுகிறது. (வ-57)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், பிரபுதேவா
நடித்த
உள்ளம் கொள்ளை
போகுதே
10-30, மட்டும் (ப. நே)
லிவிங்ஸ்டன், கரன்,
விவேக், வடிவேல்
நடித்த
எங்களுக்கும்
காலம் வரும்
2-30 மட்டும் (ப நே)
(புதிய வெளியீடுகள்)
(கி 1482)

**விற்பனையாகின்றது**

1) தமிழ் மூலம் கொம்பியூட்டர்
2) கொம்பியூட்டர் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான -NCCA-PART-I
3) OMOS-SELECTION- புத்தகங்கள்
4) டயறிகள், கலண்டர்கள்

**மக்மிலன் புத்தகசாலை**
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1502)

## மரண அறிவித்தல்

அமரர்
**அந்தோனிமுத்து தேவராசா**
(மெக்கானிக்)

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல மெக்கானிக் அந்தோனிமுத்து தேவராசா 16-02-2001 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் (17-02-2001) இன்றுசனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
பொ. அரசரெட்ணம்
(பெறாமகன்)

கடற்கரை வீதி,
நாவாந்துறை.
(2537)

**எரிக் கணேஷ் முக்குக்கண்ணாடி அகம் - பல்கட்டுதல்.**
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: 91, கே கே. எஸ் வீதி,
கொக்குவில்.

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.